என்னடா இளைஞனே இன்னும் என்ன அச்சமா
எதிரிகாலில் அடிமையாய் வாழ்வதுதான் சொர்க்கமா

அன்னை மண்ணைக் காத்திட உன்மனம் தயக்கமா
அஞ்சி நீயம் வாழ்வதால் தமிழினம் மதிக்குமா
சொல்லடா சொல்லடா சொல்லடா
சொல்லடா சொல்லடா சொல்லடா

தாய் கொடுத்த பால் உனக்கு வீரமூட்டவில்லையா
தாயகத்தை காத்திட தயக்கமென்ன சொல்லடா
பேய்கள் உந்தன் ஊரளித்து நாசம் செய்யவிடுவதா
பேடி போல ஓடி ஓடி உரிமை கெட்டுச்சாவதா
சொல்லடா சொல்லடா சொல்லடா
சொல்லடா சொல்லடா சொல்லடா

உயிரினும் அரியதெங்கள் மானம் என்று எண்ணடா
உறுதி உள்ளம் தமிழனாக உன்னை ஆக்கிக் கொள்ளடா
இமயம் தன்னில் கொடியை நட்ட மறவர் பிள்ளை அல்லவா
இன்னும் இங்கு பூனை போல இருக்கும் எண்ணம் நல்லதா
சொல்லடா சொல்லடா சொல்லடா
சொல்லடா சொல்லடா சொல்லடா

விதைகளாக வீழ்ந்து நிற்கும் வேங்கைகளைப் பாரடா
விடுதலைக்கு உதவிடாமல் விலகி ஓடல் ஏனடா
அடிமை வாழ்வில் முடிவணங்கி தமிழினமே சாவதா
அறிவு அற்ற மனிதனாக அவல வாழ்வு வாழ்வதா
சொல்லடா சொல்லடா சொல்லடா
சொல்லடா சொல்லடா சொல்லடா

என்னடா இளைஞனே இன்னும் என்ன அச்சமா
எதிரிகாலில் அடிமையாய் வாழ்வதுதான் சொர்க்கமா